சுருக்கம்

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் – முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் – திட்ட பயனாளிகளுக்கும், பொது மக்களுக்கும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட்–19 சிகிச்சைக்கான கட்டணம் நிர்ணயம் செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(அஉதி-1) துறை

அரசாணை (நிலை) எண்: 251

நாள்: 22.05.2021
திருவள்ளுவர் ஆண்டு: 2052
பிலவ, வைகாசி – 8

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.240, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–1–1) துறை, நாள் 05.06.2020
2. அரசாணை (நிலை) எண்.290, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–1–1) துறை, நாள் 03.08.2020
3. அரசாணை (நிலை) எண்.433, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–1–1) துறை, நாள் 28.10.2020
4. அரசாணை (நிலை) எண்.578, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–1–1) துறை, நாள் 29.12.2020
5. அரசாணை (நிலை) எண்.231, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–1–1) துறை, நாள் 07.05.2021

மேலும் படிக்கப்பட்டது

6. திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், கடித எண். 1887/தநாசுதி/காப்பீடு–1/2020,நாள்17.05.2021.

-------

ஆணை

தமிழ்நாடு அரசு அனைத்து மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்குடன், ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இலவச மருத்துவச் சேவைகளை செயல்படுத்தி வருகிறது.

2. உலக சுகாதார அமைப்பு, தற்போதுள்ள கோவிட் தொற்று பாதிப்பினை உலகளாவிய பொது சுகாதார பேரிடராகவும், இது கட்டுப்படுத்தக் கூடிய நிகழ்வாகவும் அறிவித்துள்ளது. இதனடிப்படையில், தமிழ்நாடு அரசும் பொது சுகாதார சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் இந்த கோவிட்–19 தொற்று பட்டியலிடப்பட்ட நோயாக அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மேலும், இந்த கோவிட்–19 தொற்றுப் பரவலைத் தடுக்கும் நோக்குடன் பெருவாரியாக பரவும் தொற்றுச் சட்டம் 1897–ன்படி வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005–ன் படியும், கோவிட்–19 தொற்று முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு வழிகாட்டு முறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

3. பார்வை 6–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் அவர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் திட்ட பயனாளிகளுக்கு, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் வழங்கப்படும் கோவிட்–19 சிகிச்சை கட்டணம் குறித்து விவாதிக்க உயர்மட்ட சிறப்பு குழு கூட்டம் 14.05.2021 அன்று நடைபெற்றது என குறிப்பிட்டு, மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதார துறைத் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின்னர், அனைத்து கோவிட்–19 தொற்று சிகிச்சைகளை ஏழை எளியோருக்கு ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கிட கருத்துருவினை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

4. மேற்காணும் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து அரசு கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரால் அனுமதி அளிக்கப்பட்ட அனைத்து கோவிட்–19 சிகிச்சை அளிக்கும் தனியார் மருத்துவமனைகள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தற்காலிகமாக அங்கீகரிக்கப்படுகிறது.

ஆ) மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி அதி–தீவிர (Critical) மற்றும் அதி–தீவிரமில்லாத (Non-critical) கோவிட்–19 தொற்றுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு ஆகும் செலவுகள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படும்.

இ) மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையின்படி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனையில் கோவிட்–19 சிகிச்சை பெறுவதற்கான அரசு மருத்துவரின் பரிந்துரை படிவம் (Referral form) இனி தேவை இல்லை என்ற குழுவின் பரிந்துரை ஏற்கப்படுகிறது.

ஈ) மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கோவிட்–19 சிகிச்சைக்கான தொகுப்பு விதம், தற்போதுள்ள தொற்று காலத்தில் மக்கள் நலன் காத்திடவும், கட்டணமில்லா சிகிச்சை வழங்கிடவும் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது.

**தீவிரமில்லாத கோவிட்–19 சிகிச்சைக் கட்டணம்**

| முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தீவிரமில்லாத (Non-critical) கோவிட்–19 சிகிச்சைக்கான கட்டணம் (ரூபாய்) | | | | |
|---|---|---|---|---|
| உள்ளடக்கம் | தீவிரமில்லாத கோவிட்–19 சிகிச்சை (Non-critical cases) | | | |
| | மிதமான ஆக்ஸிஜன் உதவி இல்லாமல் | | ஆக்ஸிஜன் உதவியுடன் | |
| | வகை –1 | | வகை –2 | |
| | பழைய சிகிச்சைக் கட்டணம் | புதிய சிகிச்சைக் கட்டணம் | பழைய சிகிச்சைக் கட்டணம் | புதிய சிகிச்சைக் கட்டணம் |
| அறைக்கட்டணம், மேற்பார்வை, நிருவாக செலவினங்கள், | 600 | 600 | – | 2000 |

Scanned with CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| பராமரிப்பு செலவினங்கள், அடிப்படை மருத்துவ உபகரணங்கள் (INTERVENTIONS VIZ N-G TUBE INSERTION, CATHETERISATION, ETC) | | | | |
| அடிப்படை மருந்துகள் மற்றும் பரிசோதனைகள் | 600 | 600 | – | 4000 |
| ஆக்ஸிஜன் மற்றும் அதன் தொடர்பான இதர இனங்கள் | 300 | 300 | – | 2000 |
| கோவிட்–19 கூடுதல் பராமரிப்பு கட்டணங்கள்<br>COVID-19 ADDITIONAL MANAGEMENT CHARGES INCLUDING BUT NOT LIMITED TO PPE KITS, PROFESSIONAL CHARGES, SANITISATION, OTHER CONSUMABLES, ETC | 3500 | 3500 | – | 7000 |
| **நாளொன்றுக்கு ஒரு நபருக்கான மொத்த சிகிச்சைக் கட்டணம்** | **5000** | **5000** | **–** | **15000** |

அடுக்கு (Tier) 1 – சென்னை பெருநகரம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அடையாளம் காணப்பட்ட மருத்துவமனைகள் (Identified Hospitals) 2 முதல் 5 வரை உள்ள வகைக்கு ரூ. 5000/– கூடுதல் சிகிச்சைக் கட்டணம்.

அடுக்கு (Tier) 2 – சேலம், திருச்சி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் அடையாளம் காணப்பட்ட மருத்துவமனைகள் (Identified Hospitals) 2 முதல் 5 வரை உள்ள வகைக்கு ரூ.3000/– கூடுதல் சிகிச்சைக் கட்டணம்.

அடுக்கு (Tier) 3 – தமிழ்நாட்டிலுள்ள மற்ற நகரங்கள்.

தரம் A1, A2 மருத்துவமனைகளுக்கு மற்றும் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நகரவகை பிரிவின்படி A1 தரக்கட்டணம் வழங்கப்படும்.

Scanned with CamScanner

தரம் A3 முதல் A6 வரை உள்ள மருத்துவமனைகளுக்கு மற்றும் 30 படுக்கை வசதிக்கும் குறைவாக உள்ள தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு நகரவகை பிரிவின்படி A2 தரக்கட்டணம் வழங்கப்படும்.

D-Dimer, IL6, LDH போன்ற பரிசோதனைகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

Remdesivir, Tocilizumab, Itolizumab, etc., போன்ற மருந்துகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

பணம் செலுத்துதல் மற்றும் செயலாக்கத்திற்கான வழிகாட்டுதல்கள் தனியாக வழங்கப்படும்.

**அதி–தீவிர கோவிட்–19 சிகிச்சைக் கட்டணம் (Critical Cases)**

| முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அதி–தீவிர கோவிட்–19 சிகிச்சைக்கான கட்டணம் (ரூபாய்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| உள்ளடக்கம் | அதி–தீவிர கோவிட்–19 சிகிச்சை (Critical Cases) | | | | | | | |
| | தீவிர சிகிச்சைப் பிரிவு வென்டிலேட்டர் வசதியுடன் | | | தீவிர சிகிச்சைப் பிரிவில் ஊடுருவாத வென்டிலேட்டர் வசதி வென்டிலேட்டர் (Non-invasive ventilation) (CPAP / Bi-PAP) | | | தீவிர சிகிச்சை பிரிவு ஆக்சிஜன் வசதியுடன் (ஆக்ஸிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு மட்டும் (ICU with O2 only as stepping down) | |
| | வகை 3 | | | வகை 4 | | | வகை 5 | |
| | பழைய சிகிச்சைக் கட்டணம் | | புதிய சிகிச்சை கட்டணம் | பழைய சிகிச்சைக் கட்டணம் | | புதிய சிகிச்சை கட்டணம் | பழைய சிகிச்சை கட்டணம் | புதிய சிகிச்சை கட்டணம் |
| | செப்சிஸ் மோட்ஸ் இல்லாமல் (WITH OUT SEPSIS / MODS) | செப்சிஸ் மோட்ஸ் உடன் (WITH SEPSIS / MODS) | | செப்சிஸ் மோட்ஸ் இல்லாமல் (WITH OUT SEPSIS / MODS) | செப்சிஸ் மோட்ஸ் உடன் (WITH SEPSIS / MODS) | | | |
| அறைக்கட்டணம், மேற்பார்வை, நிருவாக செலவினங்கள், பராமரிப்பு செலவினங்கள், அடிப்படை மருத்துவ உபகரணங்கள் (INTERVENTIONS VIZ. N-G TUBE INSERTION, CATHETERISATION, ETC) | 4500 | 4500 | 5000 | 2500 | 2500 | 4000 | - | 3000 |

Scanned with CamScanner

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அடிப்படை மருந்துகள் மற்றும் பரிசோதனைகள் | 1000 | 2000 | 6000 | 700 | 1500 | 6000 | - | 5000 |
| ஆக்ஸிஜன் மற்றும் அதன் தொடர்பான இதர இனங்கள் | உட்பட (Included) | உட்பட (Included) | 7000 | 300 | 500 | 5000 | - | 4000 |
| கோவிட் –19 கூடுதல் பராமரிப்பு கட்டணங்கள் COVID-19 ADDITIONAL MANAGEMENT CHARGES INCLUDING BUT NOT LIMITED TO PPE KITS, PROFESSIONAL CHARGES, SANITISATION, OTHER CONSUMABLES, ETC. | 8500 | 8500 | 17000 | 6500 | 6500 | 15000 | - | 13000 |
| **நாளொன்றுக்கு ஒரு நபருக்கான மொத்த சிகிச்சைக் கட்டணம்** | **14000** | **15000** | **35000** | **10000** | **11000** | **30000** | - | **25000** |

அடுக்கு (Tier) 1 – சென்னை பெருநகரம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அடையாளம் காணப்பட்ட மருத்துவமனைகள் 2 முதல் 5 வரை உள்ள வகைக்கு ரூ. 5000/– கூடுதல் சிகிச்சைக் கட்டணம்.

அடுக்கு (Tier) 2 – சேலம், திருச்சி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் அடையாளம் காணப்பட்ட மருத்துவமனைகள் 2 முதல் 5 வரை உள்ள வகைக்கு ரூ.3000/– கூடுதல் சிகிச்சைக் கட்டணம்.

அடுக்கு (Tier) 3– தமிழ்நாட்டில் மற்ற நகரங்கள்.

தரம் A1, A2 மருத்துவமனைகளுக்கு மற்றும் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நகரவகை பிரிவின்படி A1 தரக்கட்டணம் வழங்கப்படும்.

தரம் A3 முதல் A6 வரை உள்ள மருத்துவமனைகளுக்கு மற்றும் 30 படுக்கை வசதிக்கும் குறைவாக உள்ள தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு நகரவகை பிரிவின்படி A2 தரக்கட்டணம் வழங்கப்படும்.

Scanned with CamScanner

D-Dimer, IL6, LDH போன்ற பரிசோதனைகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

Remdesivir, Tocilizumab, Itolizumab, etc., போன்ற மருந்துகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

பணம் செலுத்துதல் மற்றும் செயலாக்கத்திற்கான வழிகாட்டுதல்கள் தனியாக வழங்கப்படும்.

உ) கொரோனா தொற்று மிக அதிகமாக பரவி வரும் இந்த சூழலில் மக்கள் எவ்வித தொய்வுமின்றி உரிய நேரத்தில் சிகிச்சை பெறுவதற்காக, பொது மக்களின் இன்னுயிர் காக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கோவிட்–19 சிகிச்சைக்கான கட்டணம் தனியார் மருத்துவமனைகளில் தீவிரமில்லாத சிகிச்சைக்கு ரூ.5000/– முதல் ரூ.7500/– வரையும், தீவிர சிகிச்சைக்கு ரூ.15000/– எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. இக்கட்டணமானது தற்போது முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு இணையாக கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது.

<u>**தனியார் மருத்துவமனைகளில் பொது மக்களுக்கான கோவிட்–19 தொற்று சிகிச்சைக்கான கட்டணம்**</u>

| வ.எண் | சிகிச்சை விபரம் | நாளொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | ஆக்ஸிஜன் அல்லாத படுக்கை வசதி | ரூ.5000/– (A3 to A6 தர வரிசையிலுள்ள தனியார் மருத்துவமனைகள்)<br>ரூ.7500/– (A1 & A2 தரவரிசையிலுள்ள தனியார் மருத்துவமனைகள்) |
| 2 | ஆக்ஸிஜனுடன் கூடிய படுக்கை வசதி | ரூ.15000/– |
| 3 | வெண்டிலேட்டருடன் கூடிய தீவிர சிகிச்சை | ரூ.35000/– |
| 4 | தீவிர சிகிச்சைப் பிரிவில் ஊடுருவாத வெண்டிலேட்டர் வசதி வெண்டிலேட்டர் (Non-invasive ventilation) (CPAP / Bi-PAP) | ரூ.30000/– |
| 5 | ஆக்ஸிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு மட்டும்.<br>(ICU with O2 only as stepping down) | ரூ.25000/– |

ஊ) கோவிட்–19 சிகிச்சைக்காக அதிகரிக்கப்பட்ட கட்டணத் தொகையானது இரண்டு மாதங்களுக்குள் தொற்றின் தன்மைக்கேற்ப மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

- தனியார் மருத்துவமனைகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைவிட கூடுதலான தொகை வசூலிக்கக்கூடாது. அவ்வாறு வசூலிக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட நபர் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 425 3993 மற்றும் 104 என்ற எண்களில் புகார் அளிக்கலாம்.

Scanned with CamScanner

- புகார் தகுந்த ஆதாரங்களுடன் நிருபிக்கப்பட்டால் நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் ஒழுங்கு படுத்துதல் சட்டம் (Clinical Establishment Act) மற்றும் பேரிடர் மேலாண்மை சட்டம் (Disaster Management) ஆகிய சட்டங்களின் கீழ் மருத்துவமனை மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. இந்த அரசாணை நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை-6.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை-6.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், சென்னை-6.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை - 10.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை-6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை-8.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை - 18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை - 18.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்.
அனைத்து இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம்.
**நகல்:**
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை-9
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்அலுவலகம், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி) முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
நிதி (சுகாதாரம்-2) துறை, சென்னை-9.
அனைத்துத் துறைகள், சென்னை-9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப் பிரிவு /அனைத்து பிரிவுகள்) துறை, சென்னை - 9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

22.5.21

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner